පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 10 |

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

பாடசாலையின் பெயர் : ..............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ............................................................

..............................................................................................

நேரம் : 01 மணித்தியாலம்

## வரலாறு
## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் 80 புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாவும் நான்கு தேர்வுகளைக் கொண்டது. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள படிவத்தில் × அடையாளமிடுக.

01. மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரரின் வசிப்பிடம்
1. ஆலாஹன பிரிவெனா 2. திக்சந்த சேனவியா பிரிவெனா
3. பத்மாவதி பிரிவெனா 4. காரகல பிரிவெனா

02. பௌத்த சமய நூல்களாகக் கருதத்தக்க போதி வம்சம், தூபவம்சம், தாதுவம்சம் போன்ற நூல்கள் எழுதப்பட்ட காலம்
1. கண்டிக் காலம் 2. பொலன்னறுவைக் காலம்
3. அனுராதபுரக் காலம் 4. தம்பதெனியக் காலம்

03. 'நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா' என்ற இலக்கிய மூலாதாரத்தை எழுதியவர்
1. பிளினி 2. தொலமி
3. அரிஸ்டோட்டில் 4. மெகஸ்தனிஸ்

04. சீகிரி பொத்தான, அலிகல என்பன எக்காலநிலை வலயங்களுக்கு உட்பட்டது
1. கரையோர வெட்டவெளி 2. தாழ்நில ஈரவலயக் குகை
3. ஈரவலய வெட்டவெளிப் பாசறை 4. தாழ்நில உலர்வலயக் குகை

05. 12 500 வருடங்களுக்கு முன்னர் காட்டுப்பலாவின் விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்த இடம்
1. பாகியன்கல குகை 2. கித்துள்கல பெலிலென
3. பெல்லன்பதிபெலஸ்ஸ 4. அலிகல

06. முறையான மரணச்சடங்கு இடம்பெற்ற காலப்பகுதியாகக் கருதப்படுவது
1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2. முன்வரலாற்றுக் காலம்
3. வரலாற்றுக் காலம் 4. ஆரம்ப வரலாற்றுக் காலம்

07. ஹல்துமுல்ல, பெரகல ஆகிய முன்வரலாற்றுக் காலத்துக்குரிய மயானங்கள் காணப்படும் மாகாணம் பின்வருவனவற்றுள் எது
1. சப்ரகமுவ மாகாணம் 2. மத்திய மாகாணம்
3. ஊவா மாகாணம் 4. தென் மாகாணம்

08. குளத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த குடியேற்றம் எப்பெயரால் அழைக்கப்பட்டது
1. வாபிகாம 2. பட்டானகாம
3. நியம்கம் 4. ஓலகம்

Education NCP - www.edncp.lk

09. திஸ்ஸமகாராம குளத்தை நிர்மாணித்த அரசன் யார்
1. காவன்தீசன் 2. துட்டகைமுனு 3. மகாநாமன் 4. இளநாகன்

10. கல்வெட்டுக்களில் குடும்பத் தலைவனைக் குறிக்கப் பயன்படுத்திய விதம்
1. கமிக 2. பருமக 3. குர்ஹபதி 4. கிராமிக

11. முதலாம் விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்பு சாசனத்தில் அனுராதபுரம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது
1. அபயபுரம் 2. நுருபுரம் 3. அனுராதகம 4. புராணகம

12. வரலாற்று மூலாதாரங்களில் விபரிக்கப்பட்டுள்ளபடி இந்நாட்டை ஆண்ட முதல் மன்னனாகக் கருதப்படுபவர்
1. பண்டுகாபயன் 2. விஜயன் 3. பண்டுவாசுதேவன் 4. துட்டகைமுனு

13. பருமகமாரிடையே பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அரசியல் பலம் குறிப்பிட்ட ஒரு நபரிடம் குவியும் செய்றபாடு ஆரம்பமானது எம்மன்னனுடைய காலத்திலாகும்
1. பண்டுகாபயன் 2. தேவநம்பிய தீசன்
3. வசபன் 4. துட்டகைமுனு

14. பின்வரும் அரச கோட்பாடுகளுக்கமைய அரசர்களிடையே வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்களின் சரியான ஒழுங்கு

| | |
|---|---|
| 1. குட்டகண்ண அபயன் | A. மின்னேரி கடவுள் |
| 2. மகாசேனன் | B. குபேரக் கடவுள் |
| 3. 1ம் காசியப்பன் | C. காலிங்க சக்கரவர்த்தி பெருமான் |
| 4. நிசங்கமல்லன் | D. நரேஷ்வர |

1. ABCD 2. DABC 3. BCDA 4. DACB

15. புராதன காலத்தில் நிர்வாகத்தில் குதிரைப் பிரிவின் தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்
1. ஹதி அதக 2. பன அதக
3. அச அதக 4. கொதுறுகேனா

16. ருவன்வெலிசாய தாதுகோபத்தை கட்டி முடித்த அரசன்
1. துட்டகைமுனு 2. சத்தாதீசன்
3. மகாசேனன் 4. தேவநம்பியதீசன்

17. 
- சோழ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தமை
- பனாகடுவ செப்பு சாசனத்துடன் தொடர்பு பட்டமை
- பௌத்த விகாரைகளை புனரமைத்தமை

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய மன்னன்
1. 1ம் பராக்கிரமபாகு 2. 1ம் விஜயபாகு
3. 2ம் பராக்கிரமபாகு 4. நிசங்கமல்லன்

18. தேவநம்பியதீச அரசனின் சகோதரர் அல்லாதவர்
1. உத்திய 2. மகாசிவ
3. சூரதிஸ்ஸ 4. கீர்த்தி

19. பத்தினி தெய்வ வழிபாட்டு முறையை இலங்கையில் அறிமுகப்படுத்திய மன்னன்
1. 1ம் கஜபாகு 2. 2ம் கஜபாகு
3. பாதிகாபயன் 4. 1ம் உபதிஸ்ஸன்

20. கி.பி. 8ம் 9ம் நூற்றாண்டுகளில் சீனாவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த இலங்கை மன்னன்
1. பாதிகாபயன் 2. 1ம் விஜயபாகு
3. 6ம் அக்கிரபோதி 4. 1ம் அக்கிரபோதி

21. சேனைப் பயிர்ச்செய்கைக்காக அறவிடப்பட்ட வரியை நீக்கிய அரசன்
1. நிசங்கமல்ல மன்னன் 2. 1ம் விஜயபாகு
3. வசபன் 4. 6ம் அக்கிரபோதி

Education NCP - www.edncp.lk

22. புராதன கல்வெட்டுக்களில் ‘துலாதர’ என்ற சொல்லால் குறிப்பிடப்படுபவர்
1. நூல் நூற்பவர்
2. பொற்கொல்லர்
3. கம்மாளர்
4. விவசாயி

23. ஹோபிடிகம தூண் கல்வெட்டோடு தொடர்புடைய மன்னன்
1. 1ம் உதயன்
2. 4ம் உதயன்
3. இளநாகன்
4. 1ம் காசியப்பன்

24. பின்வருவனவற்றை தொடர்புபடுத்தினால் பெறப்படும் சரியான விடையாக அமைவது

| | |
|---|---|
| 1. வழக்கறிஞர்கள் | A. மஹவெதனா |
| 2. வைத்தியர் | B. சிதகர |
| 3. சித்திரக்கலைஞர்கள் | C. வொஹார |

1. CBA
2. ABC
3. CAB
4. BAC

25. ‘கியுபிக்’ அரபு எழுத்துக்கள் எந்த நாட்டின் நகரத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்றது
1. ஈரான்
2. சவுதி அரேபியா
3. துருக்கி
4. ஈராக்

26. கல்லாயுதங்களைத் தயாரிப்பதற்காக கற்பாறைகளில் இருந்த கற்பாலங்களைப் பிரித்தெடுப்பதற்கான தொழிநுட்பம் எது
1. அமுக்கப் பிரயோகம்
2. செப்பனிடுதல்
3. தயாரித்தல்
4. பிரித்தெடுத்தல்

27. பண்டைய கல்வெட்டுக்களில் ‘ரஜமொஹால்’ எனும் பெயரால் அழைக்கப்பட்டது எது
1. கலிங்கல்
2. அணைக்கட்டு
3. மடைக்கதவு
4. கலிங்கற் தொட்டி

28. எலஹர கால்வாய் மூலம் நீர் கொண்டு செல்லப்படாத குளம்
1. மின்னேரியா குளம்
2. கிரித்தலை வாவி
3. கவுடுலு வாவி
4. இராட்சதக் குளம்

29. அண்மையில் திறந்து வைக்கப்பட்ட மொறகஹகந்த நீர்த்தேக்கம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது
1. கண்டி
2. மாத்தளை
3. நுவரெலியா
4. பதுளை

30. தண்ணீரைக் கட்டுப்படுத்துவதற்காக மடைக்கதவில் பொருத்தப்பட்டிருந்த கற்றூண் நான்கு முழம் உயரமானது. எனக் குறிப்பிடும் கல்வெட்டு எது
1. வெஸ்ஸகிரிக் கல்வெட்டு
2. பதுளைத் தூண் கல்வெட்டு
3. பெரிமியன் குளக் கல்வெட்டு
4. அம்பகமுவ கல்வெட்டு

31. இடிமின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடிய விஞ்ஞான ரீதியிலான செயற்பாடு பண்டைய பொறியியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டமைக்கான எடுத்துக் காட்டாக காணப்படும் தூபி
1. தூபாராம
2. அபயகிரி
3. ருவன்வெலிசாய
4. ஜேதவனாராமய

32. பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மிகச் சிறிய அலகு எவ்வாறு குறிக்கப்பட்டது
1. அணு
2. வசக்க
3. மாசக்க
4. பரமாணு

33. பசுக்களின் பாதுகாப்பின் பொருட்டு சாந்தி பூஜை செய்யும் பழக்கம் காணப்பட்ட மாகாணங்கள்
1. சப்ரகமுவா, ஊவா
2. சப்ரகமுவா, தென்
3. மத்திய, வடக்கு
4. ஊவா, வடமத்திய

Education NCP - www.edncp.lk

34. எம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் பிரதான வீதிகளில் கவ்வையிலிருந்து கவ்வைக்கு கற்றூண்களை நடுமாறு ஆணையிடப்பட்டது

1. பண்டுகாபயன்
2. நிசங்கமல்லன்
3. 1ம் விஜயபாகு
4. 1ம் பராக்கிரமபாகு

35. 'தெடிகம சூதிகர சைத்திய' எம்மன்னனை நினைவு கூறுமுகமாக அமைக்கப்பட்டது

1. 1ம் பராக்கிரமபாகு
2. 1ம் விஜயபாகு
3. துட்டகாமினி அபயன்
4. தேவநம்பியதீசன்

36. குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடப்பட்ட வரி

1. போஜக்கபதி
2. கெதிஅட
3. தக்கபதி
4. கெடுகணக

37. மிருகங்களை எவரும் கொல்லக் கூடாது என முதன் முதலில் சட்டம் இயற்றிய மன்னன்

1. 4ம் மகிந்தன்
2. ஆமண்ட காமினி அபய
3. நிசங்கமல்லன்
4. 1ம் உதயன்

38. பண்டைய காலத்தில் நாணய வெளியீட்டு அதிகாரி எவ்வாறு அழைக்கப்பட்டார்

1. ரூப்பத்தக்க
2. ரூப அதெக
3. பண அதெக
4. பகன பெடிக

39. கி.மு. 1129 ம் ஆண்டில் பெண்கள் தமது கண் இமைகளுக்கு நிறந்தீட்டப் பயன்படுத்திய உலோகக் கம்பி கிடைக்கப்பெற்ற இடம் எது

1. உடரஞ்சாமடம
2. பெல்லன்பதிபெலஸ்ஸ
3. மகியங்கனை
4. பாகியன்கல

40. "எனது மகளுக்குத் தயிர் உண்பதற்கு ஒரு சோடி மாடும் தேவைப்படுமே" என கூறப்பட்ட நூல்

1. சத்தர்மலங்காரய
2. செலஹினி சந்தேசய
3. பூஜாவலிய
4. ராஜாவலிய

($40 \times 2 = 80$ புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 10 |

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

பாடசாலையின் பெயர் : ..............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ........................................................
.......................................................................................... நேரம் : 03 மணித்தியாலம்

## வரலாறு
## பகுதி II

- ❖ பகுதி i இன் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி ii இலிருந்து நான்கு வினாக்களுக்கும், பகுதி iii இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை தருக.
- ❖ முதலாம் வினா உட்பட மொத்தமாக 6 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- ❖ முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும், ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் 18 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும். மொத்தமாக இவ்வினாத்தாளுக்கு 120 புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி i

(01)

அ) கீழே (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களை தரப்பட்டுள்ள இலங்கை புற உருவப் படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களை உலகப் புற உருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) அனுராதபுரம், பாகியன்கல, இரணைமடு, மினிகாகல்கந்த, மல்வத்து ஓயா, கிருந்தி ஓயா, மகாகாமம், ஜம்புகோளப்பட்டினம், பெரகல, பொலன்னறுவை, கோகர்ண, இராட்சதக் குளம்

(12 புள்ளிகள்)

(ii) கொன்ஸ்தாந்துநோபிள், உரோம், சீனா, பிரித்தானியா, ஒல்லாந்து, செங்கடல்

(06 புள்ளிகள்)

ஆ)(i) கீழே A.B.C.D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று விடயங்களுடன் தொடர்புடைய நபர்களை அல்லது விடயங்களை உமது விடைத்தாளில் அவ்வொழுங்கில் எழுதுக.

A. இண்டிகா என்ற நூலை எழுதிய கிரேக்க நாட்டவர்
B. வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம்
C. அவரண என அழைக்கப்படுவது
D. இலம்பகர்ண வம்சத்தின் முதல் அரசன்

(04 புள்ளிகள்)

(ii)


A

(i) உரு A யினால் காட்டப்பட்டுள்ள அம்சம் யாது?

(ii) இது எங்கு காணப்படுகின்றது?

(iii) இதனை அமைத்த மன்னர் யார்?

(iv) இதன் சிறப்பு என்ன?

(04 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(iii)
(i) உரு B யில் உள்ள அம்சம் என்ன?
(ii) இது எக்காலத்திற்குரியது?
(iii) இது எதற்குப் பயன்படுத்தப்பட்டது?
(iv) இது எந்த இடத்தில் கண்டறியப்பட்டது?
(04 புள்ளிகள்)



B

## பகுதி ii

(02) i. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை தொடர்பான தகவல்களை எழுதியுள்ள வெளிநாட்டு எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

ii. இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக.
(04 புள்ளிகள்)

iii. வரலாற்றைக் கற்பதன் மூலம் நாம் அடையும் பயன்கள் 2 ஐக் குறிப்பிட்டு விளக்குக.
(05 புள்ளிகள்)

iv. வரலாற்று மூலாதாரங்களை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும் மூன்று காரணிகளினூடாக விளக்குக.
(06 புள்ளிகள்)

(03) i. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் 3 காலகட்டங்களையும் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

ii. இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் 4 ஐக் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

iii. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் உணவு முறைகளை 2 காரணிகளினூடாக விளக்குக.
(05 புள்ளிகள்)

iv. முன் வரலாற்றுக் காலத் தொழிநுட்ப வளர்ச்சியில் காணப்பட்ட விடயங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.
(06 புள்ளிகள்)

(04) i. வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

ii. கீழ்வருவனவற்றிற்கான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
A. விவசாயிகள் வாழ்ந்த கிராமம்
B. இரத்தினம் பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம்
C. இடையர் வாழ்ந்த கிராமம்
D. மீனவர் வாழ்ந்த கிராமம்

(கோபாலகாம, கும்பகாரகாம, கேவட்டகாம, மணிகாரகாம, கசிகாரகாம)
(04 புள்ளிகள்)

iii. வரலாற்றுக் கால மக்கள் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.
(05 புள்ளிகள்)

iv. பண்டுகாபய மன்னன் இந்நாட்டு அரசியல் வரலாற்றில் முக்கிய மன்னனாக கருதப்படுகின்றான். இதை மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக.
(06 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(05) i. பின்வரும் பண்டைய அரச அதிகாரிகளின் பணிகளைக் குறிப்பிடுக.

A. அதி அதெக :-

B. பதகு :-

C. படகரிக :-

(03 புள்ளிகள்)

ii. பண்டைய காலத்தில் வைத்தியத் துறைக்குப் பங்காற்றிய அரசர்கள் நால்வரைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. பண்டைய சமூகத்தில் நெற்செய்கை தொடர்பான விடயங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

iv. பண்டைய சமூகத்தில் காணப்பட்ட கைத்தொழில்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(06) i. கி.பி. 11ம் நூற்றாண்டிலிருந்து 13ம் நூற்றாண்டு வரை இலங்கையில் காணப்பட்ட தென்னிந்திய வர்த்தக நிறுவனங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. பின்வரும் சொற்கள் குறிக்கும் பதவிப் பெயர்களைக் குறிப்பிடுக.

A. ஆச்சார்ய :-

B. மஹவெதனா :-

C. சிதகர :-

D. அபலவபல :-

(04 புள்ளிகள்)

iii. 4ம் உதய மன்னனின் ஹோப்பிட்டிகம தூண் கல்வெட்டில் கூறப்பட்ட வர்த்தக சட்டங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

iv. பண்டைய சமூகத்தில் காணப்பட்ட சமய நல்லிணக்கம் தொடர்பான விடயங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(07) i. பண்டைய விஞ்ஞான அறிவைப் பறைசாற்றும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

(03 புள்ளிகள்)

ii. அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட குளங்கள் நான்கைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. குளம் ஒன்றின் தொழிநுட்பக் கூறுகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

.

(05 புள்ளிகள்)

iv. சீகிரியாவின் தொழிநுட்ப முக்கியத்துவத்தை மூன்று காரணிகளினூடாக விளக்குக.

(06 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

## பகுதி iii

(08) i. விகாரைகளில் வாழ்ந்த பௌத்த பிக்குகளின் தேவைகளுக்காக அமைக்கப்பட்ட மூன்று பொய்கைகளைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. முற்காலத்தில் மக்களால் பின்பற்றப்பட்ட புராதன சம்பிரதாயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. புராதன இலங்கையில் இரும்பு பிரித்தெடுக்கும் தொழிநுட்பம் சிறப்பாக காணப்பட்டமைக்கான சான்றுகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

iv. குளம் ஒன்றை அமைப்பதற்கு தேவை ஏற்பட்டமைக்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(09) i. வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட பின்வரும் விடயங்களுக்கான வரிகளைக் குறிப்பிடுக.

A. குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடப்பட்ட வரி

B. அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காக செலுத்தப்பட்ட வரி

C. வாய்க்கால்களில் மீன் பிடித்தலுக்காக அரசுக்கு செலுத்திய வரி

(03 புள்ளிகள்)

ii. குற்றச் செயல்கள் தொடர்பான சட்டங்களை இயற்றிய மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. முற்காலத்தில் பெண்களுக்கு ஆட்சியில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

iv. நாட்டு மக்களுக்கு மன்னன் ஆற்ற வேண்டிய முக்கிய பணிகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

Education NCP www.edncp.lk

01) அ. i




Education NCP - www.edncp.lk

01) அ. ii



Education NCP - www.edncp.lk

விடைகள்

தரம் - 10

வரலாறு

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

**பகுதி – I**

| | | | |
|---|---|---|---|
| 01) 4 | 02) 1 | 03) 2 | 04) 3 |
| 05) 1 | 06) 1 | 07) 4 | 08) 2 |
| 09) 3 | 10) 2 | 11) 1 | 12) 3 |
| 13) 1 | 14) 4 | 15) 3 | 16) 1 |
| 17) 3 | 18) 1 | 19) 2 | 20) 3 |
| 21) 1 | 22) 3 | 23) 2 | 24) 1 |
| 25) 2 | 26) 2 | 27) 3 | 28) 4 |
| 29) 2 | 30) 4 | 31) 3 | 32) 2 |
| 33) 1 | 34) 3 | 35) 4 | 36) 2 |
| 37) 2 | 38) 1 | 39) 2 | 40) 4 |

( 2 × 40 = 80 புள்ளிகள்)

**பகுதி II - I**

01) அ) i.



N
மாந்தை
நாச்சியாதீவுக்குளம்
லங்காபட்டுன
கற்பிட்டி
சீகிரியா
இப்பன்கட்டுவ
மகியங்கனை
கண்டி
களனி கங்கை
புத்தள
அம்பாந்தோட்டை
வளவை கங்கை

ii.




ஆ) i. A. குளோடியஸ் தொலமி

B. கம்பளை

C. பாகியன் தேரர்

D. வலகம்பா / வட்டகாமினி அபயன்

ii. A (i) குதிரைத் தலையும் மனிதனும்

(ii) 7ம் / 8ம் நூற்றாண்டில்

(iii) இசுருமுனிய விகாரை

(iv) அநுராதபுர இராசதானிக்குரியது

B (i) தெடிகம யானை விளக்கு

(ii) தெடிகம கொட்ட விகாரை / தெடிகம சூதிகர சைத்திய

(iii) வெண்கலம்

(iv) முதலாம் பராக்கிரமபாகு மன்னன்

## பகுதி II

02) i. சீனா, இந்தியா, அரேபியா, போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா, கிரேக்கம், உரோம்

ii. குகைக் கல்வெட்டு
- ❖ பாறைக் கல்வெட்டு
- ❖ தூண் கல்வெட்டு
- ❖ சுவர்க் கல்வெட்டு
- ❖ இருக்கைக் கல்வெட்டு

iii. நாட்டின் பொருளாதார நிலை
- ❖ வர்த்தகத் தொடர்பு
- ❖ உலோகப் பாவணை (விளக்கத்திற்குப் புள்ளிகள் வழங்குக.)

iv. தாம் வாழும் சமூகம் மற்றும் உலகம் பற்றிப் புரிந்துணர்வைப் பெறல்
- ❖ இறந்த கால அனுபவத்தின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்து எதிர்காலத்தைச் சிறப்பாக்குதல்
- ❖ நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளல்

(இவ்வாறான விடயங்களுக்குப் புள்ளிகள் வழங்குக.)

03) i. அரை வரள் வலயம்
- ❖ தாழ்நில உலர்வலயம்
- ❖ தாழ்நில இடை உலர்வலயம்
- ❖ வரள் வலயம்
- ❖ மலைநாட்டு இடை உலர் வலயம்
- ❖ ஈரவலயம்

ii. மினிகாகல்கந்த
- ❖ புத்தல
- ❖ பதிராஜவல
- ❖ பெல்லன்பதிபெலஸ்ஸ
- ❖ பண்டாரவல
- ❖ ஹோட்டன் சமவெளி

iii. உணவைப் பெறக்கூடிய வளங்கள் கிடைக்கும் இடங்கள்
- ❖ நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்
- ❖ கல்லாயுதங்கள் செய்யக்கூடிய கற்கள் கிடைக்கும் இடங்கள்

(இவ்வாறான விடயங்களுக்குப் புள்ளிகள் வழங்குக.)

iv. களிமண் ஓட வடிவிலான கல்லறை தொழிநுட்பம்
- ❖ வீடமைப்புத் தொழிநுட்பம்
- ❖ உலோகத் தொழிநுட்பம்
- ❖ மட்பாண்டத் தொழிநுட்பம்

(இவற்றுக்குரிய விளக்கம் இருப்பின் பூரண புள்ளி வழங்குக.)

04) i. சுமண வாபிகாம
- ❖ ஹுந்தரி வாபிகாம
- ❖ விஹார வாபிகாம
- ❖ கடஹ வாபிகாம

ii. A. வஜ்ர சும்பட்ட
B. ரஜமொஹால்
C. $10\ km$
D. ஊராகெட

iii. நிலையான வீடுகள் அமைக்கப்பட்டமை
உதாரணம் :- உடரஞ்சாமமடம
- ❖ உணவைப் பெறுவதற்கு வேட்டையாடியமையும் விவசாயத்தை மேற்கொண்டமையும்
  உதாரணம் :- மான், மாடு, காட்டுப்பன்றி, மர அணில் என்பவற்றின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டமை
- ❖ தொழிநுட்பப் பாவனை காணப்பட்டமை (இரும்பு, மட்பாண்டம், மணிகள் செய்தல்)
- ❖ பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டியமை
  உதாரணம் :- 1. கண்களுக்கு மையிட உலோகத்திலாலான குச்சி கண்டுபிடிக்கப்பட்டமை
  2. உடம்பில் வர்ணம் பூசுவதற்கு மஞ்சள், மற்றும் சிவப்பு நிறத்திலான பூசு கற்களைப் பயன்படுத்தியமை

iv. களிமண் ஓடக்கல்லறை மயானம்
- ❖ அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்
- ❖ அஸ்திக் கலசம் வைக்கப்பட்ட புதைகுழி மயானம்
- ❖ மெகாலிதிக் மயானம்

(இவ்வாறான விடயங்களுக்குப் புள்ளிகள் வழங்குக.)

05) i. இல்லத்தலைவர்கள்
- ❖ கமிக
- ❖ பருமக

ii. கிராமப் பொது நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குதல்
- ❖ கிராமக் குளத்தை நிர்வகித்தல்
- ❖ குளத்திலிருந்து நீர் விநியோகித்தல்
- ❖ கிராமத்தவரிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- ❖ கிராம மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தல்

iii. பௌத்த சமயம் மகிந்த தேரரால் கொண்டு வரப்பட்டமை
- ❖ இரண்டாவது முறையாக முடிசூட்டு விழா நடைபெற்றமை
- ❖ நிர்வாக செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டமை
- ❖ நாட்டின் நாலா பக்கங்களில் இருந்து வெள்ளரசு மரக்கிளை நடும் விழாவிற்கு வருகை தந்தமை

iv. சோழரை இந்நாட்டிலிருந்து விரட்டியமை
- ❖ நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தியமை
- ❖ மேற்கை மையமாகக் கொண்டு செயற்பட்ட சர்வதேச வியாபாரத்தை கிழக்கிற்கு நகர்த்தியமை
- ❖ பொலன்னறுவையைத் தலைநகராகத் தெரிவு செய்தமை
- ❖ விகாரைகளைப் புனரமைப்புச் செய்தமை

06) i. சட்டத்துறை
- ❖ நிர்வாகத்துறை
- ❖ நீதித்துறை

ii. A அரசனின் ஆணை

B. அரச சபை

C. பதிவாளர் நாயகம்

D. தலைமை வைத்தியர்

iii. உள்நாட்டு வர்த்தகம்

- ❖ பண்டைய இலங்கையில் வர்த்தக நகரம், சந்தை, சங்கங்கள் காணப்பட்டமை
  உதாரணம் :- அநுராதபுரம், மகாகாமம் வர்த்தக நகரம், காலசுமண வர்த்தக சந்தை
- ❖ வர்த்தக சட்டதிட்டங்கள் காணப்பட்டமை
  உதாரணம் :- பதுளைத் தூண் கல்வெட்டு
  வெளிநாட்டு வர்த்தகம்
- ❖ வளர்ச்சியடைந்த துறைமுகங்கள் காணப்பட்டமை
  கோகர்ண, மாந்தை, கொடவாய
- ❖ தென்னிந்திய வர்த்தக சந்தைகள் காணப்பட்டமை
  நானததேசி, வலஞ்சியார், ஐந்நூற்றுவர்

iv. பல்லின கலாசார மக்கள் ஒன்றாக வாழ்ந்தமை

- ❖ சமய சகிப்புத் தன்மை காணப்பட்டமை
- ❖ அர சபையில் தமிழர் பிரதிநிதித்துவம்
- ❖ பாதுகாப்புக்காக வெளிநாட்டுப் படை ஈடுபடுத்தப்பட்டமை
  (பொருத்தமான விளக்கங்களுக்கு புள்ளி வழங்குக.)

07) i. உத்திய, மகாசிவ, சூரதிஸ்ஸ, அசேல

ii. A. 1ம் விஜயபாகு

B. 1ம் கஜபாகு

C. மகாசேனன்

D. துட்டகைமுனு

iii. சேனைப் பயிர்ச்செய்கை புத்சரன என்ற இலக்கியப் படைப்பில் செஹென் எனவும், சிங்கள உம்மக்க ஜாதகத்தில் சேன எனவும், கல்வெட்டுக்களில் பிடபிம் என்றும் அழைக்கப்பட்டது.

- ❖ மழை நீரை நம்பியே சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும்
- ❖ சேனைகளில் மரக்கறி, தானியங்கள் பயிரிடப்படும்

iv. மாடு வளர்ப்பு முக்கியத்துவம் பெற்றமை

- ❖ விவசாயத்திற்கு அடுத்த படியாக விலங்கு வேளாண்மை
- ❖ மாடு வளர்ப்போருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. (கோபாலகாம)
- ❖ தயிர், நெய், வெண்ணெய் போன்ற பொருட்கள் பெறப்பட்டமை
- ❖ மாடுகளைத் தவிர ஆடுகள், கோழிகள் வளர்க்கப்பட்டன.
- ❖ நோயாளர்களுக்கு மரணித்த ஆடுகள் கோழிகளின் மாமிசம் மட்டும் வழங்கப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

08) i. குளம்

- ❖ பொய்கை
- ❖ கால்வாய்

ii. மட்பாண்டத்திற்காக களிமண்ணைத் தெரிவு செய்தல்
- ❖ அதனைப் பதனிடல்
- ❖ சுடுவதற்கான சூளை அமைத்தல்
- ❖ உரிய வெப்பநிலையில் பாத்திரங்களை சுட வைத்தல்

iii. வஜ்ர சும்பட்ட
- ❖ அத்திவராம் (இவற்றை விளக்கமாக எழுதியிருத்தல்)

iv. அலைதாங்கி
- ❖ கலிங்கல் தொட்டி
- ❖ சுருங்கை
  என்பவற்றை விளங்கப்படுத்துதல்

09) i. ஆமண்ட காமினி அபயன்
- ❖ 4ம் மகிந்தன்
- ❖ நிஸங்கமல்லன்

ii. எலுமிச்சம் பழம், தோடம்பழம், கொரக்காப் புளி, நாரத்தை

iii. செல்வந்தர்கள் சாப்பிட்ட உணவையும் மான், இறைச்சி, நெய்யில் சுடப்பட்டது, தவிடு நீக்காத அரிசியில் சமைக்கப்பட்ட சோறையும்
- ❖ ஏழை மக்கள் கீரை வகைகள், காடிப் புளிப்பு, தீட்டாத அரிசிச் சோறு என்பவற்றை உணவாக உட்கொண்டனர்.
- ❖ திலசங்குலிக்கா என்ற எள்ளுருண்டை
- ❖ தானிய வகைகளுக்கு மேலதிகமாகக் கிழங்கு, முட்கிழங்கு, வற்றாளை என்பன பற்றி கூறப்பட்டுள்ளது.
- ❖ சுரக்காய், பீர்க்கங்காய் போன்ற கொடி வகைகள்
- ❖ மரக்கறி வகைகள் மூன்று விதமாக சமைக்கப்படல்

iv. அநுராதபுரக் கல்வெட்டில் உயர்நிலங்களில் உள்ள மரங்கள் வெட்டக் கூடாது எனவும் 4ம் மகிந்தனால் குறிக்கப்பட்டுள்ளது.
- ❖ மண்சரிவு, மண் அரிப்பு ஏற்பட வாய்ப்புண்டு காடுகள் அழிப்பதால் இயற்கை நீர் நிலைகள் வற்றி விடும் என மூன்றாம் உதயனால் அநுராதபுரத்தில் புத்தன்ஹெல இடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.
- ❖ மரஞ்செடிகளின் முகாமைத்துவம் தொடர்பாக 5ம் காசியப்ப மன்னன் கொண்டவட்டவான் தூண் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර පත්‍රිකා සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

www.lol.lk
Learn Ordinary Level

LOL.lk online Book Store

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371














































Online shopping
www.lol.lk
Learn Ordinary Level
DELIVERY ISLANDWIDE
SECURE PAYMENT

# LOL.lk online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්




## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්




## කෙටි සටහන් පොත්




වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

# ප්‍රශ්නපත්‍ර පොත්
# ගෙදරටම ගෙන්ව ගන්න
# ඔන්ලයින් ඕඩර් කරන්න
# WWW.LOL.LK
# වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal
NO PAYPAL ACCOUNT NEEDED!

# ONLINE BOOK STORE

An evening of fun for young readers


